369

Regd. No. M. 1630. OCTOBER 1922.

சுயம்பிரகாசத்துணை.

ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1 } துந்துபிஸு ஐப்பசிமீ 1உ
1922ஸு அக்டோபர்மீ 17உ { இதழ் 7

Vol. 1 No. 7

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	145
ஆசிரியரிலக்கணம்—வேதாந்தபாஸ்கரன்	146
குண்டலிசத்தி—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம்	150
சுயராச்சியம்—பத்திராதிபர்	153
சங்கீதம்—ஞானக்களஞ்சியம்	157
உயிர்ப்பிராணிகள் மகாநாடு—காரைச்சிவனடியார் பிரசுரம்	160
கற்புடைமை—விளமல் சேஷாத்திரி	162
பெண்கல்வி—S. V. G பாலன்	166

இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முத லிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலா மேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அசனல் தங்களுக்கு 3 அணு சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒருமாசத்திற்கு ...	ரூபா	8—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	5—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	3—0—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும்,

---

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3, விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு,

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான வசனசாஸ்திரமுமாகிய யோகாரகசியம்

முழுப்புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபிஉ ஐப்பசிமீ 1உ, [இதழ் 7.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
யெந்த நாளும்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரிய வாழ்வை
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தை நாடி
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கண்
முகிழ்த்து நிற்பாம்.

(தாயுமான வள்ளல்)

ஆசிரியரிலக்கணம்.

ஆசிரியர்களில் மதாச்சாரியர்கள், காரியக்குருக்கள், காரணக்குருக்கள் என மூன்று வகையுண்டு. அவர்களில்,

மதாச்சாரியர்கள்:—தமக்கு வரும்படிக்குண்டான அநுட்டானங்களைச் சீடர்கள் அநுசரிக்கும்படிக் கட்டளையிட்டு, வீணான பற்பல கருமங்களை அவசியம் செய்துதான் தீரவேண்டுமென்று போதிப்பார்கள். அப்படி நடந்துகொள்வதால், மரணமானபின் இந்திரலோகம், பிரமலோகம் முதலியவைகள் கிடைக்குமென்றும், தேவ மகளிர்களாகிய அரம்பையர்களுடன் சுகித்துப் பலகோடி வருடங்களையும் ஒருநாளாகக் கழிக்கும் தேவ வருடங்களாற் சதாகாலமும் சுவர்க்காதி போகத்துடன் வாழலாமென்றும் ஆசைவார்த்தை சொல்லித், தனக்கு வேண்டிய பொருளைப் பகற் கொள்ளைக்காரர்கள்போல் அபகரித்துத், தான் கெட்டுப்போவதுமன்றித் தன்னைப் பின்பற்றியவர்களையும் கெடுத்து, அவர்களாற் புகழப்பட்டு வாழ்வார்கள். அப்படிக்கொத்த ஆசிரியர்கள் வேடதாரிகளாவார்கள்.

குசேலோபாக்கியானம்.

ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை
வேடம் போலப்
பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ் செய்வார்தம்
பக்க மேகி
நீங்குகவென் றெழிப்பாரிந் நிலமேலாம் பிரமத்தி
னிலையே யென்பார்
ஈங்கிவர்கள் தாங்கெடுவ தன்றிமற்றோ ரையுங்கெடுக்கு
மெண்ணம் பூண்டோர்.

காரியக் குருக்கள்:—ஆரம்பத்திற் சகல பற்றும் அற்றவர்போற்பேசி நட்பு முற்றியபின் தம்பி! நீ நல்ல பிள்ளையாயிருக்கின்றாய்! இந்தத் தொழிலை உனக்குத் தான் காட்டிவைக்க வேண்டுமென்று பரிந்து சொல்லி, முக்கோணம், நாற்கோணம்,

அறுகோணம் இவைகளைக் கீறி, அதில் நசி, மசி, சிவயவசி இதுபோன்ற அட்சரங்களை அடைத்து அதை அவன் கையில் கொடுத்து, இதைப் பத்திரமாய் வைத்துக்கொள்! பிறருக்குக் காட்டாதே! இதனால் சர்வ தொழில்களும் சித்தியாகும். ஆனால் தட்சணை கொடுக்காவிட்டால் சித்திக்காது எனக்கூறிப் பணம் பறிப்பார்கள். மனிதரிடத்திற் பேசும்போது இவர், அவர் என்று சொல்வதற்கு பதிலாய் இது, அது என்று அஃறிணையாகப் பேசிக்கொள்வார்கள். இதுமட்டுமல்ல: இன்னும் அளவிறந்த பலவித சாலமெல்லாம் செய்வார்கள்.

குசேலோபாக்கியானம்.

பொன்முதல பொருளிடத்து மிச்சையற்றூர் போற்றுறவு
பூண்டு பின்னர்
வன்மைசெறி மனத்தபக்கு வர்க்குபதே சமுகவிற்றி
வருவ தெல்லாம்
நன்மைதரு முன்னேரெண் காறுமுகப் பன்ளையெண
நயந்தோ ராயன்
புன்மையறப் பற்றியஃ துடனழிந்தா னென்றகதை
போலு மாதோ,

மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும்
விடுத்தார் போன்றும்
தக்கவழக் கிடத்தினுயர் திணைவினையஃ றிணைவினையாச்
சமையச் சொற்றும்
தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயராக் கடவுரைத்துஞ்
சூழ்வ தெல்லாம்
பக்குவமின் மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப்
பறித்தற் கன்றே?

வேலைசெய்து கூலிவாங்கிக்கொள்ளும் கூலி வேலைக்காரர்களைப்போலவும், ஓர் பொருளை வாங்கிக்கொண்டு மற்றோர் பொருளைப் பண்டமாற்றாக விற்கும் வணிகர்களைப்போலவும், பிறர்க்குக் கிரியைகளைச்செய்து காட்டியும் உபதேசங்களைக்கூறியும், அவர் கையிலுள்ள பொருளை அபகரிக்கும் எண்ணமுள்ள குருவென்னும் பெயர்தாங்கிய சால வேடிக்கைக்காரர்களைச் சற்

குருவென்று மாணாக்கர்கள் எண்ணக்கூடாது. அத்தகைய முழுமாயப் பைத்தியம்பிடித்து வெறிகொண்டு முதிர்ந்த ஆசிரியரல்லாதவர், ஒருபோது கூறியதை ஒருபோது கூறாமல் பேய்பிடித்தவர்களைப்போல், வாயில் வந்தபடி பிதற்றும் அபக்குவர்களுக்குக் கூறிய உபதேசமானது, எத்தன்மைத்தெனில்; கரடியானது தனது பல குட்டிகளோடும் ஆற்றுவெள்ளத்தில் தவறி விழுந்து போகும்போது, அவ்வாற்றங்கரையின்கண் நின்ற ஓர் இடையன், அவைகளை ஆடு என்று நினைந்து அவ்வெள்ளத்திற் குதித்துப் பிடித்திழுக்க, அக்கரடிகள் இவனைத் தெப்பமென்று பற்றிப் பிடித்திழுக்க, கரடிகளும் இடையனும் அவ்வெள்ளத்தில் அமிழ்ந்து இறந்ததாகச் சொல்லப்பெறும் கதையை நிகர்க்கும்.

இடையன் கரடியை ஆடென்றும், கரடி அவ்விடையனை நதிகடக்கும் புணையென்றும் எண்ணியதுபோல்; அபக்குவனைப் பக்குவனென்றும், அனாசாரியனை ஆசிரியனென்றும் இருவரும் மாறுபாடாக எண்ணிப் பிரயோசனம் ஒன்றும் அடையார்கள்.

ஆடானது, பிரயோசனமான கரும்பைத் தின்னாமல், பிரயோசனமற்ற அதன் இலையைமட்டும் தின்று அதன் சுவையைத் தான் அறிந்ததுபோல் தனது குட்டிகளுக்கும் காட்டும். யானையானது, அவ்விலையைத் தின்னாமல், மதுரம் ததும்பிய கரும்பைத் தின்று, அந்தச் சுவையைத் தானும் அறிந்து, தனது குட்டிக்கும் காட்டும். அதுபோல் கிரியா குருவானவர், மந்திர தந்திர கலைகளை ஆராய்ந்து அவற்றுட்கூறும் சரிதாதிகளை அனுட்டித்து, அதனால் வரும் விடயானந்தத்தைத் தானும் அனுபவித்துத் தன்னையடைந்த சீடனுக்கும் அவ்வுபதேசத்தையே உபதேசிப்பார். ஞானகுருவானவர், மேற்கூறிய மந்திர தந்திர கலைகளை விலக்கி உபதேச கலையை ஆராய்ந்துணர்ந்து, அதனுட்கூறிய ஞானானந்தத்தைத் தானும் அனுபவித்து, தன்னையடைந்த சற்சீடர்களாகிய பக்குவர்களுக்கும் அவ்வனுபவத்தை யுணருமாறு செய்வார்.

ஞானனந்த முதிர்ச்சியடைந்த சாத்தியுன் உபதேசங் கூற வேண்டுமேயன்றி, அப்பியாசியாகிய சாதகன் உபதேசங் கூறுவது மிகையாகும். சாதகனிடத்தில் உபதேசம் கேட்பது எத்தன்மைத்தெனின், தான் முன் செல்லாத ஓர் ஊர்க்குச் செல்லுங்கால், முன்சென்றறியாத ஒருவனை வழிகேட்டலைந்ததுபோலாகும். அநுபவ மில்லாதவர்களிடத்தில் உபதேசம் கேட்பது, குமரியைக் குமரிகூடி அநுபவித்த இன்பத்தை யொக்குமென்று சிவஞானவள்ளல் கூறியிருக்கின்றனர். இதைப்பற்றி ஒரு சிறிய கதையுண்டு. அஃதாவது:—

திருவாரூரில் அழகில் மன்மதனுக்குமேல் முருகக்கடவுளென்று சொல்லும் விதமாகவும், ஆடையாபரண அலங்கிருதனாகவும், எழுத்துவாசனை இன்னதென்றேயறியாத நிரட்சரகுச்சியாகவும் ஒருவாலிபன் இருந்தான். அவன்பெயர் அழகு சுந்தரம்.

ஒருநாள் அந்நகரத்து (2) வது கிளாஸ் சப்மாஜிஸ்ட்ரேட் நரசிம்ம அய்யர் என்பவர், கச்சேரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது, கமலாலயக் குளக்கரையின் வடபால் மந்தமாருதத்திற்காக உலாவிக்கொண்டிருந்த அழகு சுந்தரத்தைக் கண்டுகொண்டார். உடனே வண்டியை நிறுத்தும்படிச் சொல்லிவிட்டுப் பின்வருமாறு யோசிக்கலாயினர்.

இத்தகைய வனப்பிற் சிறந்த புருடனும் இந்நிலவுலகில் இருக்கின்றானா? இவ்வளவு இலட்சணங்களை ஒருவனுக்கு அமைக்க அந்தப் பிரமதேவன், எவ்வளவு சிற்ப சாத்திரங்களைக் கற்றுக் கைதேர்ந்திருக்க வேண்டும்! அவனுடைய புத்தியே புத்தி! இவ்வழகு ஒரு பெண்பாலுக்கு அமைந்திருந்தால், இவ்வுலகத்து ஆடவர்கள் என்ன பாடுபடுவார்கள். ஆயினும் இவ்விளவலைக்கண்ட ஒவ்வொரு மகளிரும் தத்தம் நிலைகுலைவார் என்பதற்கு ஐயமே யின்று. இந்தச் சிங்கார புருடனை யன்றோ! நமது புத்திரி சானகிக்கு நாயகனாக வரிக்கவேண்டும். அவ்வாறு முற்றுப்பெறின், நமது சானகியின் பாக்கியமே! பெரும்பாக்கி

யம்! எனப் பலவாறு தனக்குள்ளே மகிழ்ந்து, தனது சேவகன் மூலமாய் அவர் இன்னார், இன்னவிடத்தில் இருப்பவர் எனத் தெரிந்துக்கொண்டார். (இன்னும் வரும்)

(வேதாந்த பாஸ்கரன்.)

குண்டலி சத்தி.

(139-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூர்மபுராணம்.

அரும்பெறல்யோகம்நன்கிற் கைவந்தோரவற்றின்போகம்
விரும்புறின்முத்தியெய்தார் வெறுவெளியதனிற்றோன்றும்
பரம்பொருளாகுமென்னைப் பாவித்தோர்முத்திசேர்வர்
விரிந்திடுபிரமம்யானே யெனமறைவிளம்புமன்றே.

பிரபுலிங்கலீலை.

சித்தியும் ஆயுளும் சிறப்புங் காமியப்
புத்திய ரடைவர் அப்புத்தி நீங்கினோர்
முத்தியை யடைவரெம் முதல்வன் பூசையால்
சத்தியம் சத்தியம் தளர் மருங்குலாய்.

சர்க்கரையை நாவினில் வைக்காமல் ஒருவன் தன் உதட்டில் தடவிக்கொண்டால், அதனால் அவனுக்கு யாதொரு சுவையுந் தோன்றாது. வெளியிலுள்ள ஈ எறும்புகளே வந்து உண்ணும். அந்த ஈ எறும்புகளால் அவனுக்கு உபத்திரவம் நேரிடும். அந்தச் சர்க்கரையை உதட்டில் வைக்காமல் நாவின் மத்தியில் வைப்பானேயானால், ஈ எறும்பு மொய்க்கப்பெறாமல் அதன் மதுரத்தைப் பானம்பண்ணுவான். அதுபோல் காமியத்தவஞ் செய்பவர்கள் எல்லாம் உலகத்தார் மயங்கித் தன்னைப் புகழ்வதற்காக மணலைச் சீனியாகவும் கடலைபாகவும் ஜாலம்போன்ற வேடிக்கைகளைச் செய்து காட்டுவதால், ஜனங்கள் கும்பல்கூடி அவனை யுபாதிக்கத் தொடங்கி விடுகின்றனர். அதனைச் சகிக்கமாட்டாமல் தம்முடைய தவவலிமையையு மிழந்து, வாலிழந்த நரியைப்போல் எங்காகினும் ஓடிப்போய் மறைந்துகொள்ளப் பார்ப்பார்கள். நிட்காமியத் தவமுடையவர்களோ பயித்தியம்

பிடித்தவர்களைப்போலும் இல்லறத்தாரைப்போலும் காலங்கழித்து வருவார்கள். எவர்க்கேனும் ஆபத்து நேர்ந்த விடத்து அபூர்வமாய் எவராலுஞ்செய்வதற்கரிய உபகாரஞ்செய்வார்கள்.

ஞானமணிமாலை.

பேறுபெற்ற பேர்களொன்றும் பேசிடார் புவிக்குளே
ஆறுபத்துக் கந்தையு மூடத்திமே லழுக்குமாய்
நீறுமெத்தப் பூசியே நினைவில்லாத பேயர்போல்
ஊறுகுத்திக் கண்டெல்லோரும் உற்றிடா தகற்றுவார்.

ஒரு மணமகன் மணமகள் சமேதனாய் மாதுலன் கிரகத்திற்கு மருவுண்கச்சென்று தனது நண்பர்களுடன் வீற்றிருக்கையில், சில பெண்கள் மணமகளை நோக்கி அவனது நாயகனல்லாதவர்களைக் குறிப்பித்து, இவரா! நினது காதலர்? இவரா! நினது நாயகர்? என வினவுந்தோறும், இவரல்ல! இவரல்ல!! என்று சொல்லிக்கொண்டே வந்து, தனது நாயகனைக் காண்பித்து இவரா! நினது பதி? யெனக் கேட்டபோது மௌனமுற்று வெட்கித் தலைகுனிந்தாள் என்பதைப்போல், பிரக்ஞையோடு கூடிய சவிகற்ப சமாதியைப்புரிந்து சிற்சில அநுபவங்கள் கைவந்தவுடன் காமியமனத்தோடு தனக்கு அது தெரியும்! இது தெரியும்! என்று பிதற்றுவார்கள். தன்னிலையென்றும் நிருத்தமென்றும் கூறுநின்ற ஐந்தாவது யோகபூமியில் நிருவிகற்ப சமாதிபுரிந்த முமுட்சுக்கள் சித்திகளைச்செய்து கும்பல் கூட்டாமல் சர்வசங்க பரித்தியாகராகவும் மௌனவிரதம் பூண்டவராகவும் இருப்பார்கள். ஆனால் மௌனவிரதம் என்பது வாயைமட்டிலும் மூடிக் காடுமேடுகளை நினைத்துக்கொண்டு ஊர்வம்புச் சமாச்சாரங்களை யெல்லாம் ஒருவார்த்தையில் சொல்லவேண்டியதை (10) தடவையில் கைக்கோரணி காட்டியும், கேட்பவர்க்கு விளங்காமையால் மேலும்மேலும் கைக்கோரணி காட்டிக்கொண்டு மனதைப் புறம்பிலே விட்டுத் திரிவதல்ல. வாயை மூடியதுபோல் ஓடுகின்ற மனதையும் விடயாதிகளில் பற்றவிடாமல், அடக்கி எதார்த்த வடிவத்தில் நிலைக்கச்செய்து தன் வசமற்றிருப்பதுவே மௌனமாகும்.

தாயுமானவள்ளல்.

சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச்
சும்மாவிருக்க வருள்வாய்.

சிவஞானவள்ளல்.

ஊமைகண்ட சொப்பனம்போன் றன்றே யறிவதன்றி
நாமிதெனச் சொற்றிடவு நண்ணுமோ—தாமதம்போல்
ஆங்கதுவாய்ப் போவதலா லன்றிதா மென்றுரைத்த
வீங்கொருவ ருண்டோ விசை.

அத்துவிதச் செல்வர்களாகிய சனகமகாராசனும் பகீரத ராசனும் மாபலி சக்கிரவர்த்தியும் ஏனைய சான்றோர்களும் ஞானம் ஒன்றையே சாதனமாகக் கருதி யடைந்தனரேயன்றி சித்திகளை விரும்பவில்லை. அவ்விதமிருக்கச் சில மகானுபாவர்கள் அணிமாதிசித்திகளை விரும்பிப் பசிதாகமில்லாமல் ஒற்றைக் காலால் கழுத்தளவு நீரிலும் பஞ்சாக்கினியின் மத்தியிலும் ஊசி முனையிலும், பசியெழுந்தால் இலை, சருகுகளையும் சலத்தையும் நிரப்பி வாயுபக்ஷணஞ் செய்தலிலும் மலைக்குகை முதலியவைகளிற் பிரவேசித்தலிலும் இன்னும் இவைபோன்ற பல அரிய இடுக்கண்களிலும் புற்றாகி மரமாகிப் பலநாளிருந்து சரீரத்தை வருத்துவது யாது காரணத்தாலெனின், அவர்கள்செய்த இச்சா பிராரத்துவ கன்மங்களை அனுபவித்தானபிறகு தான் அவர்கள் முத்தியை யடைவார்கள். அங்ஙனமின்றேல் முத்தியை யடைய முடியாதென்னுங் கருத்தையடக்கி,

கைவல்ய நவநீதம்.

அனகனைமைந்தனே முத்தி ஞானத்தையே அடைந்தனரல்லாமற்
சனகன்மாபலிபகீரதன் முதலினோர் சித்திகள்படித்தாரா
இனியசித்தியைவிரும்பினர் சிலர்சில ரிரண்டையுமுயன்றார்கள்
முனிவர்சித்திகள்வினோத மாத்திரந்தரும் முத்தியைத்தாராவே.

யோகஞானமே முத்தியைத்தருமெனில் ஒழிந்தசித்திகள்வேண்டி
மோகமாயுடல்வருந்தினர் சிலசிலமுத்தர்க ளேனென்றால்
போகமாய்வரும்பிரா ரத்துவகன்மங்கள் புசித்தன்றோநசித்தேகும்
ஆகையாலவந்தச்சித்திகள்பிரா ரத்துவமாகு மென்றறிவாயே.

(வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்.)

சுயராச்சியம்.

(126 - ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வாறு சுயராச்சியம் புரிவதற்கு இடையூராக நல்லவனைப்போல் உட்பகையுடைய மனம் என்னும் அரசன் *96 தத்துவங்களில் ஒருவனான நான் என்னும் பேய்பிடித்தாடும் அகங்காரம் என்னும் பரமதுஷ்டனைத் தனக்குச் சேனாதிபதியாகவும் ஏனைய 95 தத்துவக் கூட்டங்களை சைனியங்களாகவும் கொண்டு, சுய அரசாட்சி செய்ய நமக்கு அநுகூலமாக உதவிபுரியும் நண்பர்களாகிய ஞானம், அருள், தவம், சாந்தம், வாய்மை, மேன்மை, மோனம், பஞ்சேந்திரிய மடக்குதல் என்னும் சத்துவகுணத்தின் செய்கையாகிய 'எண்மர்களையும், இயமம் 10, நியமம் 10, சாதன சதுட்டயம் முதலான பல உத்தமோத்தமர்களையும் தலைகாட்டவிடாமல் அடக்கி, நமக்கும் நன்மைசெய்யும் பாவனைபோல், காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரிய இராகத்துவேஷ முதலான பல கரோமான தின்மைகளை விளைவித்து ஆன்மலாபத் திரவியங்களை யெல்லாம் எடுத்துத் தங்கள் மனோபீஷ்டம்போல் துர்விநியோகஞ்செய்து சின்னாட்களுக்குள் நம்மை (ஆன்மாவை) காயாபுரிக் கோட்டையை விட்டு வெளியேற்றி, எமனென்னும் விடாக்கண்டனாகிய கொலைஞனிடம் ஒப்புவிக்க, அவன் நம்மைப் பிடித்துப்போய் நரகம் என்னும் இருட்டறையில் (Black Hole of Calcutta) போட்டுப் பூட்டிவிடுகிறான்.

இவ்விதமாகவே நமது முன்னோர்களில் வைராக்கிய வீரர்களாகவிருந்த பல தீர்க்கதரிசிகளுக்கும், பட்டினத்தார், தாயுமானவர், குணங்குடியார் முதலான பேரின்ப தேசாதிபதிகளுக்கும், சித்தர் குழாங்களாகிய யுத்த வீரர்களுக்கும் மாத்திரம்

---

* பூதம் 5, புலன் 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, காரணம் 4 என்னும் ஆன்மதத்துவம் 24; நாடி 10, அவத்தை 5, மலம் 3, குணம் 3, மண்டலம் 3, பிணி 3, விகாரம் 8, ஆதாரம் 6, தாது 7, வாயு 10, கோசம் 5, வாயில் 9, ஆக தத்துவங்கள் 96.

சுயராச்சியம் கொடுத்து, அவர்கள் இஷ்டம்போல் தானும் நடந்து ஏனையோர்களை யேமாற்றிப் போட்டான். அந்த ஏமாற்றத் திற்குள்,

குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே இமைந்துவீண் பொழுது
கிலத்திலே போக்கி மயங்கி யேமாந்து.

என்ற ஸ்ரீராமலிங்க அருட்பிரகாச வள்ளல் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாக் கருத்தின்படி நமது முன்னோர்க ளும் அகப்பட்டு ஏமாந்து நரகம் என்னும் பெரிய இருட்டறை யில் சிக்கி வருந்துகின்றனர். அதுபோல் நம்மையும், நமது சந் ததியார்களையும் ஏமாற்றி ஷ இருட்டறையில் போட்டுப் பூட்டி விட உத்தேசித்திருக்கிறான். அவனுடைய துஷ்டத்தனத்தை முளையிலேயே கிள்ளி யெறிந்திருந்தால் இவ்வளவுக்கு இடந் தராது. "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பதை நாம் அசட்டைசெய்து மனப்பகைவன் போனவழி யிலேயே நாமும் போய்த் திரிந்தபடியாலும், துஷ்டர்களெல் லாம் அவனைச் சிநேகங் கொண்டிருப்பதினாலும் அவனே சர்வ அதிகாரங்களை வகித்துவந்ததாலும் இப்போது அந்த மனப்பகை வனையடக்கியாள நம்மால் முடியவில்லை. வேலிக்குநாட்டிய குச்சி ஆலமரமாகி வாள், கோடரி முதலிய ஆயுதங்களாலும் வெட்டித் தள்ளுவது சிரமமாகியதுபோல் ஆகிவிட்டது. ஆகையால் நாம் இனிமேலும் அவ்விதம் இராமல் நமது நண்பர்களாகிய இயம நியம முதலானவர்களைக்கண்டு அவர்களுக்கு உற்சாகம் வரும் படியாகவும், அவர்கள் நம்மீது கருணைகொண்டு நமக்கு இரவும் பகலும் துணைசெய்யும்படியாகவும் வேண்டிக்கொண்டு ஏற் கனவே சுயராச்சியம் அடைந்திருக்கும் மஹான்களை அடுத்து,

மருமலர்ச் சோலைசெறி கன்னிழன் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா லிகைசொல்லு மியமகிய மாதியா
மார்க்கத்தி னின்றுகொண்டு

கருமருவு காயத்தை நிர்மலம் தாகவே
கமலாச னாதிசேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காம
லுணர்வான விழியைநாடி
ஒன்றோ டிரண்டெனுச் சமரச சொரூபசுக
முற்றிடவென் மனதின்வண்ணம்
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

என்ற தாயுமான வள்ளலின் கருத்தின்படி ஏவல்செய்து நமது பகைவர்களையடக்கி அவர்களை நமக்கு பாதுகாப்பாளராக நியமித்து நமது காயாபுரிக்கோட்டையைக் கைவசப்படுத்தி தன்னையும் தனக்காதாரமான தலைவனையும் நன்குணர்ந்து தவமுயற்றி சுயராச்சியமடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவோமாக.

தாயுமான வள்ளல்.

காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

துணங்குடியார்.

இராகம்-பரிசு-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோங்குணங்குடிக் கெல்லோரும்—புறப்படுங்கள்
போவோங்குணங்குடிக் கெல்லோரும்

அநுபல்லவி.

பாவங்கள்சோர்ந்திடுங் காய்ந்திடுநீந்திடும்
மாய்ந்திடுமோய்ந்திடுந் தீய்ந்திடுமிக்ஷணம்(போ)

சரணங்கள்.

1. அண்டம்புவனங்கொண்டாட நிட்டை-சாதிக்கவறியா
முண்டமழுதும்பட்ட கட்டை-மணித்தேரோடு

தண்டிகையானைகுதிரை யொட்டை-வைத்தேறிவாழுஞ்
சண்டியுடலொட லொட்டை-மின்னார்களின்பங்
கொண்டுமயங்கிக்காம வெட்டை- நஞ்சுண்டுசாமி
ரண்டுங்கெட்டவனேமேய் மட்டை-அவனுக்கந்தத்
தொண்டாசைகால் ரண்டுந்தான்குட்டை-விழிகுருடர்
நண்டளந்தநாழியவர்நமக் கேன்காணந்தெட்டை(போ)

2. கோத்திரளானகாயபொய்க் கூடு-ஒருவருக்குஞ்
சாற்றுக்காகாநாற்றக்கரு வாடு-சொறிமலமு
மூத்திரமுமூற்றிவைத்த வோடு-இடுமடையர்
போற்றுதற்கேற்றசண்டி மாடு-உயிர்விடுக்குங்
கூற்றுவன்கையாயுதத்திற் கிடு-எங்தெந்ததிக்கிற்
பார்த்தாலும்பிறலுற்ற வீடு-சமைத்தெடுத்த
சோற்றுற்குவித்துவைத்த மேடு-இவையறியார்
ஏற்றபடிகெட்டலைவ ரேனமக்குமந்தக்கேடு(போ)

3. செட்டுச்செய்யவேண்டிய தில்லை-பரதேசிகள்
சட்டியெடுப்பதுவுந் தொல்லை-பிச்சைக்கஞ்சிக்குத்
திட்டமுடன்வேணுமோ கல்லை-உறங்குதற்குக்
குட்டிச்சுவர்களிலுண் டெல்லை-ஈடுநமக்குப்
பட்டினத்திலெவரு மில்லை-அறிவுகெட்ட
மட்டியறியாணிந்தச் சொல்லை-மனக்குரங்கைக்
கட்டிவைத்தாலுங்காட்டும் பல்லை-அதைப்பிடித்து
துட்டமாமாயைப்பசாசைத் துரத்தித்துரத்திக்கொல்லப் ()

4. சோமனுதயம்பாடு சாயும்-எழுஞ்சூரியன்
நாமமில்லாமலறத் தேயும்-பரவெளியில்
நேமமுடன்சுழினை யாயும்-மதியமிர்த
வாமமடைதிறந்து பாயும்-தத்வாதியோடு
காமக்குரோதங்களைத் தீயும்-தீயாதுயோக
பூமிவிளையுமரு ணேயம்-விளைந்தபோகம்
நாமோகைக்கொள்ளும்படி ஞாயம்-கிடைப்பதற்குச்
சாமுன்செத்தசற்குருபாதம் சார்ந்திருப்பதுவேயுபாயம்()

5. தொங்கும்நரையுமாகப் பொங்கும்-காமக்கடலுள்
முங்கும்பரவியுடலைச் சொங்கும்-சொரிசிரங்கும்
வங்கும்நமநமமென்று திங்கும்-நரம்புந்தோலுந்
தொங்குமினுமினுப்பு மங்கும்-இல்லந்துறந்த
சிங்கங்கட்கில்லைகாணும் பங்கம்-மேனியுயர்ந்த
தங்கமயமாய்நின்றி லங்கும்-அவர்கட்கன்றே
தங்குஞ்சாயுச்யபதந் தங்கும்-நமக்குமதிற்
பங்குந்தந்துதவிப் பராபரமருளிரங்கும்(போ)

(பத்திராதிபர்.)

சங்கீதம்.

(105-ம் பக்கத் தொடர்ச்சி.)

சங்கீதமானது வாழைநாரைப்போன்றும், சாகித்தியம் என்னும் செய்யுள் முதலிய கீர்த்தனங்களோ பரிமளமிகுந்த புட்பங்களைப்போன்றும் உள்ளன. ஒருவர், வாழைநாரில் தொடுக்க புட்பங்களைச் சூடிக்கொள்ள விரும்புவரேயன்றி, வாழை நாரை மட்டும் சூடிக்கொள்ள விரும்புவதில்லை. ஆனால் வாழைநாரில்லாமல் புட்பங்களைமட்டும் சூடிக்கொள்ளலாமோவெனில், ஒருவாறு சிரோருகம் முதலியவற்றில் சூடிக்கொள்ளலாம். அது பிறருக்கு விசேட அலங்காரமாய்க் காணப்படாதேயன்றி, தனக்கும் பிறருக்கும் சுகந்தமான வாசனை பரிமளிக்காமல் போகாது. அதுபோல் கடவுள்மீது பக்திரசமான பாடலைச் சேர்க்காமல், வெறும் வாழைநாரைப்போன்ற சங்கீதத்தைமட்டும் 'தொந்தானா தொந்தானா'வென்று குரல் நெரிந்து கம்மும்படி விடிய விடியக் கத்தினாலும் ஒரு எட்டுணைப் பிரயோசனத்தையும் தராது. அன்றியும் பிராணவாயுவானது, வேதாந்த பாஸ்கரன் முதற்பாகம் 16-வது சரலாப நட்டம் என்னும் அத்தியாயத்தில் காட்டியுள்ள விதியைக்கடந்து அனாவசியமாய்ச் செலவழிந்து போவதால், வரட்சி அதிகரித்து பற்பல ரோகங்களும் சஞ்சரிக்கச் செய்யும். ஆனால் சங்கீதத்தின் ஒத்தாசையின்றிக் கடவுளைத் தோத்தரிக்கலாமோவெனில், ஆட்சேபமும் சந்தேகமுமின்றி அவசியம்

தோத்திரம் பண்ணலாம். தேங்காயின் உள்ளிருக்கும் தண்ணீர் முதலியவைகளைப் புசிக்க விரும்பாமல் தேங்காய் உடைக்கும் சத்தத்தை மட்டும் விரும்புகின்றவர்களுக்கும், சாரத்தை ஒழுக விட்டுச் சக்கையைத் தங்கச்செய்யும் பன்னாடையை நிகர்த்தவர்களுக்குமே, தானா, தொந்தானாவென்று இசைகூட்டாமல் பாடுவது திருப்தியாயிராதே யன்றி; கடவுளுக்கும் அவரது மெய்யன்பர்களுக்கும் திருப்திகரமாய் இராமற் போகாது என்பது நாம் சொல்லாமலே செவ்வையாய் விளங்கும்.

ஒருமனிதன் நமக்கு எழுதிய கடிதத்தின் கையெழுத்து அழகா யில்லாவிட்டாலும், அந்த நிருபத்தின் சாராம்சமாகிய உண்மையான கருத்தைமட்டிலும் அவசியம் தெரிந்துக்கொள்ள விரும்புகிறோமேயன்றி; கையெழுத்து அழகாயில்லை யென்று அதைப்பார்க்காமல் எறிந்துவிடமாட்டோம். ஆனால் கையெழுத்தும் அழகாயிருந்தால் அதிக விசேடந்தான். அதுபோல் நாம் கடவுளிடத்தில் செய்துகொள்ளும் மனுவாகிய தோத்திரப் பாக்களில் சங்கீத இசையில்லாவிட்டாலும் அந்த பாக்களின் முக்கிய கருத்து என்னவென்று உணர்ந்து, அந்த மனுதாரராகிய அன்பர்கட்கு இன்னருள்பாலிக்க விரும்புவாரேயன்றி; சங்கீதம் சேர்த்துப் பாடவில்லையென்று ஒருபோதும் பராமுகமாக இருக்க மாட்டார். ஆனல், 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்பதுபோல் சங்கீதம் சேர்ந்திருந்தால் விசேடந்தான். இல்லாததற்கு என்னசெய்து கொள்ளலாம்? 'கண்ணாடி இல்லை, சிப்பு இல்லை' என்று கல்யாண முகூர்த்தத்தை எங்கேனும் நிறுத்தி விடுவதுண்டா? இல்லையே! அதுபோல் சங்கீதம் தனக்குத் தெரியவில்லையென்று கடவுளைத் தோத்திரம் பண்ணாதிருந்தவர்களும் இருக்கின்றவர்களும் இருப்பவர்களும் இறப்பு, நிகழ்வு, எதிர்ப்பு என்னும் முக்காலங்களிலும் இல்லை. ஆகையால் நம்மவர்களே! சங்கீதம் தெரியவில்லையேயென்று கடவுளைத் தோத்திரம்பண்ணாமல் ஏமாந்துபோய் வாணாளை வீணாளாகக் கழித்து விடாதீர்கள். சாக்கிரதை! சாக்கிரதை!! சாக்கிரதை!!!

சாதாரண மனிதர்கள் சுகந்தமான அழகிய புட்பங்களை மிருதுவான நாரில் தொடுத்துக் கடவுளின் ஞாபகச் சின்னமாக அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகம், படம் முதலியவைகளுக்கு அணிந்து அலங்காரம்செய்து, ஆடல்பாடல் புரிந்து குதூகலம் அடைவார்கள். அதுபோல் மகான்கள் தோத்திரப்பாக்கள் என்னும் இரமணீகரமான அழகிய புட்பங்களை இனிமை தங்கிய சங்கீதம் என்னும் நாரில் தொடுத்து, உண்மையான கடவுளுக்குப் பூமாலைக்குப் பதிலாகப் பாமாலை சாத்தி ஆனந்த நிர்த்தனம் செய்து இன்புறுவார்கள்.

தாயுமானவள்ளால்.

பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
 பாமாலைக் கேநீதான் பட்சமென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்
 நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
 தொண்டனேன் எந்நாளுந் துதித்து நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா வென்றே
 யெனைக்கலப்பாய் திருக்கருணை யெம்பிரானே.

கொடுக்கின்றோர்கள்பாற் குறைவையா தியாதெனுங் குதர்க்கம்
விடுக்கின்றோர்கள்பாற் பிரிகிலா துள்ளன்பு விடாதே
அடுக்கின்றோர்களுக் கிரங்கிடுந் தண்டமிழ் மாலைகள்
தொடுக்கின்றோர்களைச் சோதியா ததுபரஞ் சோதி.

திருவிளையாடற்புராணம்.

பழுதகன்ற நால்வகைச்சொல் மலரெடுத்துப் பத்திபடப்
 பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண்
 மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல் சூட்டவரிச்
 சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா ளடிமுடிமேற்
 கொண்டு வாழ்வாம்.

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்)

மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

"மற்றவர்களைப்போலவே உங்கள் திருவருளால் பிறந்திருக்கிற எங்களை மனிதர்கள் பல வகையாக அவமானப்படுத்தாமலும் ரகசியமாகவும் பஹிரங்கமாகவும் கொலைபுரியாமலு மிருக்குப்படி திருவுளம்பற்ற வேண்டுமென்று இந்தக் கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பரமசிவனது திருக்கரத்திருந்து திவ்ய வாழ்க்கை வாழும் செல்வச் சிறுமான் கன்று துள்ளிக்குதித்து வந்து மேடையிமேலறிப் பிரரேபணை செய்து பின்வருமாறு பேசிற்று:—

எனது துணைவர்களே! உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் கடவுளது திருவருளாலேயே பிறந்திருக்கின்றன. கடவுளுக்குப் பலவகையிலும் நாம் வேண்டியவர்களாக விருக்கிறோம். பரம்பரைச் சைவ சந்ததியிலே பிறந்திருக்கிற நாம் கெட்ட காரியம் ஒன்றும் செய்வதில்லை. எல்லாருக்கும் உபகாரமே செய்து வருகிறோம். அப்படியிருக்க நம்மை மனிதர்கள் துடிக்கத்துடிக்கக் கத்திகொண்டு கழுத்தை யறுக்கிறார்கள்! திருவிழா வந்தாலும் பிள்ளை பிறந்தாலும் பிள்ளை பிறக்காவிட்டாலும் பொங்கல் வந்தாலும் புதுமை வந்தாலும் இழவு வந்தாலும் கலியாணம் வந்தாலும் படைப்பு வந்தாலும் பதறிவிழுந்தாலும் நமது கழுத்துக்குக் கத்திவருகிறது. நம்மவரெல்லாரிலும் சாதுக்களாயிருப்பவர்கள் ஆடு கோழி வமிசத்தாரேயாவர். அவர்களைத் தான் கண்டபடி மனிதர்கள் கழுத்தறுப்பு செய்கிறார்கள். கலிகால வரதராயும் தெய்வங்களுள் சிறந்தவராகவும் அக்கிரமம் செய்பவரை அதம் செய்பவராயும் ஏழைகளைத் தோழமை கொண்டவராயுமுள்ள சுப்பிரமணியக் கடவுளே அவர்களைக் காப்பதாக அடைக்கலங் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் சிவபக்தர்கள் விஷ்ணுபக்தர்கள் ஸ்கந்தபக்தர்கள் விநாயக பக்தர்களென்று சொல்லித் திருபுண்டரதாரணம் செய்து துவாதச நாமமிட்டுக்

கொண்டு ஆடு கோழி பாராணைசெய்யும் மனிதர்களையும் நாம் பார்க்கிறோம். பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர ஜபஞ்செய்யும் பக்தர்கள் பலர் புலால்கொண்டு தொந்தியை நிரப்புகிறார்கள். சாப்பிடுவதொருபுறங் கிடக்கட்டும். கண்டபடி கழுத்தறுப்பதை இப்போதே தடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் கருத்தாகும். பெரிய பெரிய கடவுளர்களால் மதிக்கப்பெற்றிருக்கிறோம். அப்படியிருக்க நமது சந்ததியாரைச் சில ஜனங்கள் கேள்வி முறையின்றித் தாயலறப் பிள்ளையையும் கொல்லுகிறார்கள். கொலைக்குற்றம் செய்தவரைக்கூட இப்படி ஏககாலத்தில் முச்சந்திகளில் மடக்கிக்கொண்டு ரத்தம் சொரிய அறுப்பது எந்த உலகத்திலும் கிடையாது. அப்படியென்ன குற்றத்தை நம்மவர்கள் மனிதர்களுக்குச் செய்திருக்கிறார்கள். இதைப் பார்த்துக்கொண்டு நாம் சிலர்மட்டும் பெரிய உத்தியோகங்களிலிருந்து பயனென்ன? இதற்கு விமோசன மில்லாவிட்டால் நாமிருந்தாலென்ன செத்தாலென்ன? தன் ஜாதியார் அவமானமடையத் தான் நன்கு வாழ்பவன் ஒரு பிறப்பிற் சேர்ந்தவனேயல்லன். திக்கற்றவருக்குத் தெய்வமே துணையென்றபடி வாயில்லாப் பிராணிகளுக்குக் கடவுள்தான் துணையாதலால் இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்து நமது தேவர்கட்கு அனுப்பவேண்டுகிறேன் என்று சபையார் கண்களில் கண்ணீர் சொட்டும்படி உருக்கமாகப் பேசினார். ஏக ஆரவாரத்தோடு தீர்மானம் அங்கீகரிக்கப் பெற்றது.

அக்கிரமம் செய்வாரைத் தண்டித்து நல்வழிப்படுத்துகிற யமதர்மராஜனது வாகனமாயிருக்கிற மகிஷப்பெருமானெழுந்து, "உண்மையில் காளி கறுப்பணாகிய நீங்கள் விரும்பாதிருக்கும்போது உங்கள் பெயரைச் சொல்லி எங்கள் கழுத்தை யறுப்பவர்களை நல்வழிப்படுத்த நீங்கள் முன்வந்து முயற்சி செய்யவேண்டுமென்று வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரேரணை செய்து பின்வருமாறு பேசியது:—

எனது அன்பின் மிக்க சகோதரர்களே!

காளியம்மனையும் கறுப்பண்ண சாமியையும் திருப்திப்

படுத்த வேண்டுமென்று கருதிய சில மனிதர்கள் நம்மவரின் கழுத்தை யறுத்து வருகிறுர்கள். உண்மையில் காளியம்மன் பராசக்தியின் அம்சமாதலாலும் கருப்பண்ணசுவாமி மகாவிஷ்ணுவின் அம்சமாதலாலும் இருவரும் ஆடு கோழிகளைக்கொன்று ஒருநாளும் மகிழ்வார்களென்று கருத இடமேயில்லை. ஆனுல் இவர்கள் குளிக்கப் போய்ச் சேறுபூசிக் கொள்வதைப்போலத் தான் கடாய்ப் பலிகொடுத்துப் பாபத்தைக் கட்டிக்கொள்வதோடு தேவர்களின் கோபத்திற்கும் ஆளாகிறுர்கள். ஆனபடியினுலே இந்தத் தீர்மானத்தைக் காளி கறுப்பண்ணன் முனியப்யா முதலியோருக்கு அனுப்பி, அவர்களை வழிபடும் மனிதர்கள் இனிமேல் எந்தவிதமாகவும் யாருடைய பெயரைச் சொல்லியும் நம்மினத்தவரைக் கண்டிப்பாக வெட்டக்கூடாதென்று உலகத்திலுள்ள மனிதர்கட்கு உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்ள வேண்டும் என்று பேசியது. இதனைப் பலரும் ஆமோதிக்கவே தீர்மானம் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

(இன்னும் வரும்)

(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் துண்டுப் பிரசுரம்.)

கற்புடைமை.

(119-ம் பக்கத் தொடர்ச்சி.)

சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டர்
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுத னேர்.

என்னும் உண்மை வாக்கின்படி கணவனுக்கு ஒத்து நடவாத பெண் எமனைப்போல் குடும்பத்திற்கு நாசம் விளைவிப்பாள். கற்பிழந்த ஸ்திரீகள் கணிகை(தாசி)களினும் கடையவர்கள்.

கற்பிழந்ததால் அகலிகை கல்லாய் சபிக்கப்பட்டாள். பிரகஸ்பதி மனைவியாகிய தாரை யாவராலும் நிந்திக்கப்பட்டாள் இன்னும் கற்பிழந்ததால் இப்பூவுலகத்தாரால் தூஷிக்கப்பட்டு

சீ! சீ! என்று இகழப்பட்ட பெண்மக்கள் (அல்ல பேய்கள்) அனந்தம்.

இனிநாம் தற்காலத்திய பெண்மக்களைக் கவனிப்போம். தற்காலத்திய ஸ்திரீகளோ நவீன நாகரீக வெள்ளத்தில் மிதப்பதால் கற்புநிலை குன்றியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கணவர்களை மதிப்பதேயில்லை. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பதை அறியாமல் கணவன் சொல்லை அவமதித்து வெகுண்டு பேசுகிறார்கள். புருஷன் கண்டித்தால் அவன் உயிருக்கே தீங்கு விளைக்கிறார்கள். பொதுவாகக் கூறுமிடத்து, அச்சம், நாணம், மடம், பயிற்பு என்னும் ஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்களை விடுத்து, மானிடப்பேய்களாகி விடுகிறார்கள். புருஷன் அருந்தினாலும் சரி அருந்தாவிட்டாலுஞ்சரி காலையில் நவீன நாகரீகப்படி பல்துலக்கியோ துலக்காமலோ கள்ளினுங் கடையான காபியைக் குடிக்கிறார்கள். இல்லாவிடிலோ தலைக்கு அமிர்தாஞ்சனம் போடவேண்டிவருமாம்! இம்மட்டோ? ஆயுள் விருத்தி, முகவசீகரம் முதலியவைகளுக்குரிய மஞ்சள் பூச்சை விட்டு உடம்பிற்குத் தீங்கை விளைவிக்கும் ஸோப்புகளை உபயோகித்துத் துன்பமடைகிறார்கள். "குங்குமம்" என்பது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவராது. இப்படிப்பட்ட ஸ்திரீகளிடம் மூதேவி குடிபுகுவாள் என்பதில் ஐயமேயில்லை.

தற்காலத்தில் நம்மிந்தியநாடு தாங்கொணா வறுமையை அடைந்து முன்னேற்ற மடையாமலிருப்பதற்கு காரணம் நம் நாட்டில் உள்ள ஸ்திரீகளின் கற்புநிலை குன்றியிருத்தலேயாம்.

> "செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
> கோங்கவிழ் நல்லார் கற்புக் குறைபட்டோ
> நலத்தகு நல்லாய் நன்னா டெட்டாம்
> அலத்தற் காலை யாகிய தறியேன்."

என்று பெரியாரொருவர் ஓர்நாடு பஞ்சத்தால் வருந்திய விஷயத்தைக் கூறுகையில் கற்பின் மகிமையை நன்கு விளக்கியிருக்கிறார்.

தற்காலத்து ஸ்திரீகளில் பெரும்பாலர் கற்புக்குன்றியவர்களாய் இருப்பதுபற்றி,

விவேகசிந்தாமணி.

வெம்புவாள்விழுவாள்பொய்யே மேல்விழுந்தழுவாள்பொய்யே
தம்பலந்தின்பாள்பொய்யே சாகின்றேனென்பாள்பொய்யே
அம்பிலுங்கொடியகண்ணாள் ஆயிரஞ்சிந்தையாளை
நம்பினபேர்களெல்லாம் நாயினுங்கடையாவாரே.

சேலைகட்டிய மாதரைநம்பினோர்
தெருவில்நின்று தியங்கித்தவிப்பரே.

சிவப்பிரகாச சுவாமிகள்.

செய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங்கொளலாம் நூறுவயதாமளவும்
பேய்கொண்டாலுங்கொளலாம் பெண்கொள்ளலாகாதே.

என்று பலவாறு மிக்க கேவலமாகத் தூஷிக்கப்படுகிறார்கள்.

இந்த வசைச்சொற்களையும் மானக்கேட்டையும் நீக்கிக்கொள்ள விரும்பும் பெண்மக்கள் பின்வருமாறு நடந்துகொள்ளுதல் வேண்டும்.

1. "பதியே பாவையருக்குத் தெய்வம்" என்னும் உண்மைமொழியை ஒவ்வோரு ஸ்திரீயும் அறிந்து கணவனைத் தேவனாகப் பாவித்து உபசரித்து, கணவனது திருவடிகளையே தியானித்தல் வேண்டும.

2. பெரியோர்களிடத்தும் சிறியோர்களிடத்தும் அவரவர்கள் யோக்கியதைக்குத்தக்கபடி மரியாதை செலுத்தல்வேண்டும்.

3. கூடாநட்பு கேடு விளைவிக்குமாதலால் அதனை ஒழித்து உத்தம ஸ்திரீகளோடு சகவாசஞ் செய்தல்வேண்டும்.

4. நாயகனுக்கு போஷணையில் அன்னையையும், நற்புத்திபுகட்டுவதில் ஆசானையும், இன்பமளித்தலில் தாசியையும், பணிவிடைசெய்வதில் வேலைக்காரியையும் ஒத்து நடத்தல்வேண்டும்.

5. கணவனுக்கு எது அப்பிரியமோ அதனை நீக்கி அவனுக்குப் பிரியமானதைச் செய்தல்வேண்டும்.

6. புருஷனை மந்திர தந்திரங்களினால் வசியப்படுத்தாது அன்பினால் வசியப்படுத்தல் வேண்டும்.

7. பதிவிரதைகளின் சரித்திரங்களைப் படித்து பதிவிரதா தர்மத்தை உணர்ந்து அதன்படி நடத்தல் வேண்டும்.

8. தங்கம், வைரம் முதலிய பொய் அணிகளை விலக்கி கற்பென்னும் மெய் அணியை அணிதல் வேண்டும்.

9. கணவனுக்குப் பின் தூங்கி முன்னெழுந்து வீட்டுக் காரியங்களைச் சரிவர கவனித்தல் வேண்டும்.

10. பொய், வஞ்சகம், கோபம் முதலியவற்றை நீக்கி,

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது.

என்றபடி எப்போதும் யாரிடத்தும் இன்சொற்களை கூறுதல் வேண்டும்.

11. சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை,

அறநெறிச்சாரம்.

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால் ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றித்து நின்று.

என்னும் நீதிகளை மனதில் பதியச் செய்துக்கொண்டு அந்நீதி தவறாமல் நடத்தல் வேண்டும்.

மேற்சொன்ன விதிகளை நம் நாட்டிலுள்ள பெண்மக்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடித்து பதியை ஆராதனைசெய்து கணவன் நாமத்தையே பகவந் நாமமாகக்கொண்டு பஜித்து வந்தால் நம் நாட்டிலுள்ள தாங்கொணா வறுமை நீங்கி நம் பாரதமாதா

வின் வதனத்தில் லக்ஷிமி ஆனந்தநிர்த்தனம் செய்வாள் என்பது ஸத்தியம்.

விளமல் சேஷாத்திரி.

பெண் கல்வி.

(117 - ம் பக்கத் தொடர்ச்சி.)

புருடனுக்கு பூவையுட்பட்டு நடக்கமாட்டாள் என்று பல வாருகக் கூறுகிறுர்கள். அது முற்றும் தவறு. அவரவர் இயற்கைக்குணம் என்றும் மாருது. கல்வி கற்பதால் ஒன்று; கல்வி கற்காததால் ஒன்று என்பது ஒன்றுமில்லை. கல்வியே கற்காத மாதர்களுட்பலர் துர்நடத்தைக்காளாகியும், புருடரை மதியாதும், ஒன்றுக்கிரண்டு தாறுமாருகப்பேசியும் வருவதைக் கண்கூடாக காண்கின்ருேமன்ருே? அப்படியிருக்க, கற்பதால்மட்டும் நடை பிசகுமென்று எவ்வாறு சொல்வது? கல்வியறிவால் தீய வழிகளில் செல்லலாகாதெனத் தெளிவார் பலர். மேலும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றதற் கொப்ப இல்லறமாகிய வண்டியை கல்வியறிவாற் கண்ணைப்பெற்ற புருடனுகிய ஓர் எருதும், கல்வியின்மையால் கண்ணிழந்த பூவையாகிய மற்ருேர் எருதும் சேர்ந்து இழுத்தால் எவ்வாறு அவ்வண்டி சரியான வழியிற் செல்லும். ஒருபோதும் செல்லாது. ஆதலால் "இல்லறமல்லது நல்லறமன்று" என்றதற் கிணங்க இல்லறத்தை ஒருவன் சரியாக நடத்த விரும்பினுல் அவன் மனைவியும் அதற்குடன்பட்டவளாயிருத்தல் அவசியம். அவ்வாறின்றியிருப்பின் அது எவ்விதத்திலும் பயன்படாது. அவ்வாறு இருவரும் ஒரு மனப்பட்டு வாழ்வதற்கு இருவருக்கும் கல்வியறிவு இன்றியமையாததாகும். நல்லொழுக்கம், நன்றிசெய்தல், பொருமையின்மை, ஜீவகாருண்யம் இவையிருந்தாலன்றி இல்லறம் நல்லறமாகாது. அதற்கு புருடனைப்போல் ஸ்திரீகளும் கல்விகற்றுத் தேர்தல் அவசியம். அப்போதுதான் இருவரும் ஒருமனப்பட்டு ஒருகாரியத்தைச் செய்யக்கூடும், அவ்வாறின்றி படிப்பறியாத பாவையைமணந்த ஒருவன் ஒரு தருமத்தைச் செய்ய முயன்ருல் அதன்

பலனையறியாத அம்மாது அவனை அதைச் செய்யவொட்டாது முன்னின்று தடுப்பாள். கல்வியறிவுடையவளாயிருப்பின் அதன் கருத்தறிந்து தானும் அதற்குரியவற்றைச் செய்து சிறப்பிப்பாள். அன்றியும் குழந்தைகள் தங்கள் தாய்மாரிடத்தில் எப்போதும் இருக்குமேயன்றி தந்தைவசம் ஏதோ சிறிதுபோது தான் இருத்தல்கூடும். அக்குழந்தையின் தாய் கற்றறிந்தவளாயிருப்பின் சிறுகச்சிறுக விளையாட்டுக் காட்டிக்கொண்டே நன்னடைகளையும், கல்வியையும் இளமைப் பருவத்திலேயே போகித்து விடக்கூடும். தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டு மென்ற மூதறிஞர் வாக்கின்படி அப்படி கற்பிக்கப்படும் கல்வி நன்னடைகள் செவ்வையாக மனதில் படிந்து பசுமரத்தாணிபோல் என்றும் மாறாது.

ஆகலின் அன்பிற் சிறந்த சகோதர சகோதரிகாள்! இதுகாறும் எம் சிற்றறிவுக் கெட்டியவரை பெண்கள் கல்விகற்ப தவசியமென ஒருவாறு விளக்கினேம். இனி அவர்கள் எவ்வித கல்வி கற்கவேண்டுமென்பதை ஒருவாறு விளக்குவோம்.

பெண்கள் புருடர்களைப்போன்று எல்லாக் கல்வியும் கற்க வேண்டியதில்லை. அவர்கள் எப்போதும் மேல்நாட்டாரைப் போன்று சுயேச்சையின்றி இளம்பிராயத்தில் பெற்றோரிடமும், விவாகமானதும் புருடனுடனும், புருடனுக்கு முன்னிறப்பின் பிள்ளையிடமும் கட்டுப்பட்டிருக்க வேண்டியவர்கள் ஆகையால் தங்கள் பெற்றோரிடமும், புருடரிடமும், மைந்தரிடமும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் தங்கள் குடும்பத்தை எவ்வளவு சிக்கனமாக நடத்தவேண்டு மென்பதையும், பெற்ற குழந்தைகளை பிணியின்றி காப்பாற்றி அவர்களை நல்வழிக்குரியவர்களாகச் செய்வது எவ்வாறு என்பதையும், மனைவி புருடனிடம் முக்கியமாக நடந்துகொள்ளவேண்டிய விதிகள் என்னவென்பதையும், பெண்கட்குரிய அச்சம், மடம், நாணம், பயிற்பு என்ற குணங்களை எவ்வாறு அடைவதென்பதையும், உலகில் எதற்காக தம்மைக் கடவுள் படைப்பித்தார்? அதன் காரணம்

என்ன? ஏனைய ஜீவராசிகளைவிட நமக்கு பகுத்தறிவைக் கொடுத்ததின் விசேடம் என்ன? அவ்வறிவைக் கொடுத்தவருக்கு தாங்கள் பிரதியுபகாரமாக என்னசெய்ய வேண்டுவது? அவ்வாறு செய்வதற்கான வழியேதேனும் உண்டா என்றவைகளைத் தெரிந்துகொள்வதற்கான நூல்களில் தங்கள் நுண்ணறிவைச் செலுத்தவேண்டுமேயல்லது நவீன நாகரீக முதிர்ச்சியின் பலனைகப் பெண்கள் எவ்வித சுதந்தரமும் பெறவேண்டுமென்று மங்கைப் பருவமடைந்த பின்னும் பாட்சாலை சென்று உயர்தரப் படிப் பென்று கருதப்பெறும் B.A., M.A., வகுப்பிற் படித்தல் கூடாவாம். ஏனைய ஆடவரோடு வித்தியாசமின்றி நவீன நாகரீகத்தின்படி கைகுலுக்கிக் காதலை உண்டுபண்ணும் கட்டுரைப் புத்தகங்களை (நாவல்களை) வாசித்தல் ஒருபோதுங் கூடாது. நம்நாட்டு பெண்கள் ஆங்கிலம் கற்கவேண்டிய அவசியமேயில்லை. அப்பாஷையால் அடையும்பலன் கேவலம் ஜீவனார்த்தம் ஒன்றேயன்றி வேறொன்றும் கிட்டாது. அவ்வாறு ஜீவனார்த்தத்திற்கு மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல உத்தியோகம் செய்து இவர்களும் பிழைக்கவேண்டுமென்ற கடனில்லை. ஆதலால் நம் தாய்ப்பாஷையிலுள்ள பாரதம், இராமாயணம், பெரிய புராணம், பகவத்கீதை முதலிய நீதிநூல்களைக் கசடறக் கற்றுணர்ந்தால் பெண்கட்குரிய எவ்வித விதிகளும் இனிய வசனரூபமாக உபமானத்தோடு தெற்றென விளங்கும்.

பெண்கள் படிப்பதற்காக தற்காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பெண்கள் பாடசாலைக்கு நம்நாட்டுப் பெண்களை அனுப்புவது சரியல்ல. நமது நாட்டுப் பெண்மணிகளால் போதிக்கப்படும் பாடசாலைக்குமட்டும் நமது குழந்தைகளை அனுப்பவேண்டும். அவ்வாறு நமது நாட்டு ஸ்திரீகள் உபாத்தியாயினியாக ஆகும்படி பல்லோரையும் நாம் தூண்டி அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்துகொடுத்தல் நமது கடமையாகும்.

S. V, G. பாலன், திருவாரூர்.

ஞானப் பொக்கிஷம்.

மூழுமூடன்.

ஒரு மடாதிபதி பொழுது போக்குக்காக ஒரு விகடனை நியமித்திருந்தார். அவரிடம் வந்த விருந்தினர்களைத் தன் வாக்சாதுர்யத்தினால் சந்தோஷிக்கச் செய்தமையால் அவர் அவனிடம் ஒரு தடியைக் கொடுத்து இவ்வுலகில் எவன் முழுமூடனே அவனிடம் அத்தடியைக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

சிலமாதங்கள் சென்றபின்பு மடாதிபதி மரணாவஸ்தையிலிருந்தார். அவர் நண்பர்களனைவரும் அவரைச் சூழ்ந்துகொண்டு அவர் நற்கதியடையும்படி கடவுளைத் தோத்தரித்துக் கொண்டிருந்தனர். விகடன் அங்கு சென்று அவர் முன்னிலையில் நின்றான்.

மடாதிபதி:—விகடா! நான் போய்வருகிறேன்.

விகடன்:—எங்கு! எங்கு!!

மடாதிபதி:—வேறு உலகத்திற்கு.

விகடன்:—எப்பொழுது திரும்புவீர்கள்? ஒரு மாதத்தில் வருவீர்களா?

மடாதிபதி:—இல்லை.

விகடன்:—ஒருவருஷத்தில் வருவீர்களா?

மடாதிபதி:—இல்லை.

விகடன்:—பின்பு எப்பொழுது வருவீர்கள்?

மடாதிபதி:—ஒருபோதும் வரமாட்டேன். இனி திரும்பவே மாட்டேன்.

விகடன்:—அப்படித் தாங்கள் போவதாக இருந்தால் போகும்போது கொஞ்சம் பொருள் எடுத்துச் செல்வீர்களாகில் அதை வைத்துக்கொண்டு அவ்வுலகில் சௌக்கியமாக வாழலாம்.

மடாதிபதி:—எனது விருப்பத்திற்கு முற்றிலும் விரோதமாக எனது பொருள்களை யெல்லாம் இவ்விடம் விட்டுவிட்டுப் போக வேண்டி யிருக்கின்றதே. என்செய்வேன்!

விகடன்:—இருக்கட்டும். இங்கிருந்து பொருள்கொண்டு போகாவிட்டாலும் அங்கேயாவது முன்னதாகவே ஏதாவது ஏற்பாடுசெய்து வைத்திருக்கிறீர்களா?

மடாதிபதி:—ஒன்றும் செய்யவில்லை. எனக்கு அங்கு போவதற்கு இஷ்டமே யில்லை. ஆயினும் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டி யிருக்கிறது.

விகடன்:—என்ன! தாங்கள் திரும்பிவாராமல் ஒரே போக்காய்ப் போகப்போகிறீர்கள். இங்கிருந்து பணம் கொண்டுபோக முடியாதென அறிந்தும் முன்னதாக யாதொரு ஏற்பாடும் செய்து வைக்கவில்லை. தடியைப் பிடியும் ஐயா! உம்மைவிட முழுமூடனை இதுகாறும் இவ்வுலகில் நான் காணவில்லை.

(தன்னோடு செல்வது வேண்டின் அறஞ்செய்க.)

ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

ஞாயமா! ——— ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிசமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி நீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய கரடுமுரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் நீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.